# கொள்முதல் அறிவித்தல்

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சு

## இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்

## நில்வெல்ல, குடாவெல்ல, சுதுவெல்ல மற்றும் தொடந்துாவ மீன்பிடித் துறைமுகங்களில் அணைகரையின் மறுசீரமைப்பு பணிகள்.

## (Breakwater rehabiliation work at Nilwella, Kudawella, Suduwella and Dodanduwa Fishery Harbours)

## *(CFHC/PD/BW/NIL-KUD-SUD-DOD/2026-30)*

இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் சார்பாக திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் **நில்வெல்ல, குடாவெல்ல, சுதுவெல்ல மற்றும் தொடந்துாவ மீன்பிடித் துறைமுகங்களில் அணைகரையின் மறுசீரமைப்பு பணிகளை செய்வதற்கு** தகுதியான மனுதாரர்களிடமிருந்து தேசிய போட்டி முறையின் கீழ் முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தொடர்புடைய விவரக்குறிப்புகள் பின்வருமாறு.

| தொ / இல. | விபரம் மற்றும் கொள்முதல் இலக்கம் | பொறியியலாளர் மதிப்பீட்டு செலவு மற்றும் காலம் | தேவையான தகைமை | விலைமனு பிணைத்தொகை | மனுக்கள் செல்லுபடியாகும் காலம் | மீள்ச் செலுத்தப்படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | **நில்வெல்ல, குடாவெல்ல, சுதுவெல்ல மற்றும் தொடந்துாவ்** துறைமுகங்களில் அணைகரையின் மறுசீரமைப்பு பணிகள் **(CFHC/PD/BW/NIL-KUD-SUD-DOD/ 2026-30)** | செலவு **ரூ.49,000,000.00 மில்லியனாகும்** (வரி மற்றும் எதிர்பாராத செலவுகளற்ற) ஒப்பந்த காலம் **180 நாட்கள்.** | 01. CIDA Grade - C5 அல்லது அதற்கு மேல் கட்டுமானத்திற்காக (Maritime Construction) | பெறுமதி **ரூ.613,000.00** வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய செல்லுபடியாகும் காலம் **2026.07.22** (பண வைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.) | விலைமனு ஏற்றுக்கொள்ளப் படும் இறுதி திகதியிலிருந்து **2026.06.24** ஆம் திகதி வரை செல்லுபடியாகும். | **ரூ.12,500.00** |

இதற்காக ஆர்வம் காட்டும் தகுதிவாய்ந்த வழங்குநர்கள் / பெயரிடப்பட்ட முகவர்கள் அல்லது பெயரிடப்பட்ட முகவர்களுக்காக **2026.03.05 ஆம் திகதி முதல் 2026.03.25 ஆம் திகதி வரை அலுவலக வேலை நாட்களில் மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 மணி வரை** தலைமை அலுவலகத்தின் கொள்முதல் முகாமையாளரிடம் **(நில்வெல்ல, குடாவெல்ல, சுதுவெல்ல மற்றும் தொடந்துாவ)** மீன்பிடித் துறைமுகத்தில் எழுத்துமூலம் கோரிக்கை ஒன்றினை முன்வைப்பதன் மூலம் அல்லது **மீள்செலுத்தப்படாத ரூ.12,500.00** கட்டணத்தினை செலுத்துவதன் மூலமாக விலை மனு கொள்முதல் ஆவணத்தினை பெற்றுக்கொள்ள முடியும்.

மனு ஆவணங்களை தலைமை அலுவலகம், நில்வெல்ல, குடாவெல்ல மற்றும் அம்பலாங்கொடை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தில் உரிய கொள்முதல் ஆவணத்தினை இலவசமாக பரீட்சிக்க முடியும்.

1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 08 ஆம் பிரிவின் படி, பொது ஒப்பந்தப் பதிவேட்டினால் வழங்கப்படும் சான்றிதழ் (விலைமனுப் பெறுமதி ரூபா ஐந்து மில்லியனை விட அதிகமாக இருப்பின்) சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுப் பிணையானது, கொள்முதல் நிறுவனத்தின் முதல் எழுத்து மூல கோரிக்கையின் பேரில் நிபந்தனையின்றி பணமாக மாற்றக்கூடிய, இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும் என்பதுடன், அது **தலைவர், இலங்கை மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனம், இல.15, ரொக்ஹவுஸ் ஒழுங்கை, கொழும்பு 15** என்ற பெயருக்கு விநியோகிக்கப்படல் வேண்டும். மனுப் பிணையானது, பண வைப்பாகவும் (இலங்கை ரூபாவில்) செலுத்தப்படலாம்.

கொள்முதல் ஆவணப் பிரதிகள் இரண்டினை அசல் மற்றும் நகல் எனக் குறிப்பிட்டு வெவ்வேறாக உறைகளில் இட்டு அவற்றை தனியொரு உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.

முறையாக கையொப்பமிடப்பட்டு இரப்பர் முத்திரையிடப்பட்ட மனு ஆவணத்தினை கடித உறையிலிட்டு அதன் இடதுக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயரினை குறிப்பிட்டு **2026.03.26 ஆம் திகதி மு.ப.11.00** மணிக்கு முன்னர் அல்லது கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது **இலங்கை மீன்பிடித் துறைமுகத்தின் தலைமை அலுவலக, கொள்முதல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இட வேண்டும்.**

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட கொள்முதல் ஆவணம் **2026.03.26 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு கொள்முதல் பிரிவில்** மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும். தாமதமாக கிடைக்கப்பெறும் கொள்முதல் ஆவணங்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும்.

குறித்த கொள்முதல் ஆவணங்களை முழுமையாக அல்லது பகுதியாக ஏற்கும் அல்லது நிராகரிக்கும் உரிமையினை ஆணைக்குழு கொண்டுள்ளது.

இது குறித்தான முன்மனுக்கூட்டம் **2026.03.16 ஆம் திகதி மு.ப.11.30 மணிக்கு இலங்கை மீன்பிடித் துறைமுகத்தின் தலைமை அலுவலகத்தில் கூட்டம் நடைபெறும் மண்டபத்தில் நடைபெறும்.** இதற்காக ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை **முகாமைத்துவ சிவில் பொறியியலாளர் தொலைபேசி இலக்கம் : (0112-529391)** மற்றும் **கொள்முதல் முகாமையாளர் (வேலை பார்க்கும்) தொலைபேசி இலக்கம் : (0112-525063)** எனும் **தொலைப்பேசி** இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களத்தின் கொள்முதல் குழு,
இலங்கை மீன்பிடித் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம்